BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

An international open access, peer- reviewed, refereed journal

# சைவ நெறிகள் கூறும் வீரேசுவரர் வழிபாட்டு முறைகள்

# Worship Methods of Veereswarar According to Saiva Principles

**முனைவர் த. தினேஷ்**

தமிழ் உதவிப்பேராசிரியர், விஇடி கலை மற்றும் அறிவியல் (இருபாலர்) கல்லூரி, ஈரோடு, தமிழ்நாடு, இந்தியா – 638 012.

**Dr. D. Dhinesh**

Assistant Professor of Tamil, VET Institute of Arts and Science (Co-education) College, Thindal, Erode – 638 012,

E-mail: dhineshd@vetias.ac.in

**Abstract**

Veereswarar, popularly known as Veerabhadra, is an important deity in Saivite tradition and is regarded as a fierce manifestation of Lord Shiva created during the destruction of Daksha's sacrificial ritual. This study examines the worship practices, literary references, historical background, and religious significance of Veereswarar worship as reflected in Tamil literature, Puranas, Saiva Agamas, and folk traditions. Texts such as *Kandapuranam*, *Thevaram*, and *Veerabhadra Parani* portray Veerabhadra as a heroic and protective deity worshipped across South India and Sri Lanka. The article also discusses various ritual practices including abhisheka, garlanding, festival worship, and offerings associated with Veereswarar temples. Furthermore, the study highlights the social and spiritual beliefs connected with this worship, such as courage, protection from evil forces, prosperity, and mental strength. Overall, the research establishes that Veereswarar worship represents both a religious tradition and a symbol of Saivite cultural heritage deeply rooted in Tamil society.

**Keywords :** Veereswarar, Veerabhadra, Saivism, Tamil Religious Culture, Saiva Traditions, Thevaram

**ஆய்வுச் சுருக்கம்**

வீரேசுவரர் எனப்படும் வீரபத்திரர் சைவ சமயத்தில் முக்கியத்துவம் வாய்ந்த தெய்வமாகக் கருதப்படுகிறார். தட்சன் நடத்திய யாகத்தை அழிக்க சிவபெருமானின் கோபத்திலிருந்து தோன்றிய வீரமூர்த்தியாக இவர் புராணங்களில் விளக்கப்படுகிறார். இக்கட்டுரை சைவ நெறிகளில் கூறப்படும் வீரேசுவரர் வழிபாட்டு முறைகள், அதன் வரலாற்றுப் பின்னணி, இலக்கியச் சான்றுகள் மற்றும் சமய முக்கியத்துவங்களை ஆய்வு செய்கிறது. கந்தபுராணம், தேவாரம், திருச்செந்தூர்ப் புராணம், வீரபத்திரப் பரணி போன்ற இலக்கியங்கள் வீரபத்திரரை வீரமும் காவல்தன்மையும் கொண்ட தெய்வமாகப் போற்றுகின்றன. தமிழகம் உள்ளிட்ட தென்னிந்திய பகுதிகளில் பரவலாக காணப்படும் வீரேசுவரர் வழிபாட்டில் அபிஷேகம், தும்பைப்பூ மாலை, வெற்றிலைமாலை, பவுர்ணமி மற்றும் அஷ்டமி வழிபாடு போன்ற சடங்குகள் சிறப்பிடம் பெறுகின்றன. மேலும், இவ்வழிபாடு மனவலிமை, தைரியம், தீயசக்திகளிலிருந்து பாதுகாப்பு, வளமை ஆகிய நம்பிக்கைகளோடும் தொடர்புடையதாகும். ஆகவே வீரேசுவரர் வழிபாடு என்பது சைவ சமய மரபுகளையும் தமிழர் ஆன்மிக பண்பாட்டையும் வெளிப்படுத்தும் முக்கியமான வழிபாட்டு மரபாகத் திகழ்கிறது.

**முக்கியச் சொற்கள் :** வீரேசுவரர், வீரபத்திரர், சைவ நெறிகள், வழிபாட்டு முறைகள், தட்சயாகம், சைவ சமயம், தமிழர் பண்பாடு, புராணங்கள், தேவாரம், வீரபத்திர வழிபாடு.

## முன்னுரை

உலகில் மிக உயர்ந்த செல்வம் வீரமேயாகும். வீரத்தால் அடைய முடியாத பொருளில்லை. அதனாலேயே நமது தெய்வங்கள் வீர தெய்வங்களாக சித்தரிக்கப்படுகின்றன. விநாயகர், முருகன் போலவே சைவர்களின் சிறப்பிற்குரிய வழிபடு தெய்வமாக வீரரேசுவரர் திகழ்கிறார். வீரம் என்பதற்கு அழகு என்றும் பத்திரம் என்பதற்குக் காப்பவன் என்றும் பொருள் கொண்டு இவருக்கு வீரபத்திரர் என்ற இன்னொரு பெயரும் உள்ளது. இதற்கு அழகும் கருணையும் கொண்டு அன்போடு காப்பவர் என்று பொருள் காண்பர் சைவச் சான்றோர். தென்னாடு உடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி என்று தினமும் ஈசனை மனம் உருகி வழிபடுபவர்களுக்கு 'வீரேசுவரர்' பற்றி தெரிந்து இருக்கும். என்றாலும் பெரும்பாலானவர்கள் அவரைப் பற்றியும், அவரது அவதார சிறப்புப் பற்றியும் அறிந்து கொள்ளாமலே உள்ளனர். அதனைக் குறித்து இந்த ஆய்வுக்கட்டுரை மிக விரிவாக விளக்க இருக்கின்றது.

**தென்னகமும் வீரேசுவரரும்**

தென்னகத்துச் சைவர்கள் வீரபத்திரரை துணைத் தெய்வமாக தனிச் சன்னதியில் வைத்து வழிபடுகின்றனர். பின், வட நாட்டிலிருந்து வீர சைவர்கள் தென்னாட்டிற்குப் பரவிய பின்னரே வீரபத்திரருக்கு தனி ஆலயங்கள் அமைக்கும் வழக்கம் வந்ததென்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். வீரேசுவரர் எனும் வீரபத்திரர் சிவபெருமானின் நெற்றிக் கண்ணில் இருந்து தோற்றுவிக்கப்பட்ட கடவுளாகக் கருதப்படுகிறார். சிவபெருமானை மருமகனாகக் கொண்ட கர்வத்தினால் தட்சண் சிவனை மதியாமலும் அவருக்கு கொடுக்க வேண்டிய அவிர்பாகத்தைக் கொடுக்காமலும் யாகத்தை நிகழ்த்தினான்.

நியாயம் கேட்டு நின்ற தாட்சாயணியையும் மதிக்காமல் பேசவே தாட்சாயணி யாகத்தீயில் வீழ்ந்து தன்னை மாய்த்துக் கொள்ள முனைய, ருத்திர தாண்டவமாடிய சிவனின் உடலெங்கும் தோன்றிய வியர்வைத் துளிகள் ஆயிரம் வீரபத்திரராகத் தோன்றி பின் அவை ஒன்றாகியதென்றும், கடுங்கோபத்துடன் யாகசாலை சென்று அங்கிருந்த தேவர், முனிவர் சகலரையும் துவம்சம் செய்தார் என்றும் ஈற்றில் தக்கனின் சிரசை தம் கைவாளினால் அறுக்க அவன் ஆட்டுக்கடா வடிவெடுத்து வீரபத்திரனிடம் மன்னிப்புக் கேட்டு நின்றான் எனவும் புராணங்கள் கூறும்.

வீரபத்திரரின் வழிவந்தவர்கள் மற்றும் அவரை குலதெய்வமாக வழிபடுபவர்கள் வீரமுஷ்ட்டி, அல்லது வீரபத்ரீயா என்று அழைக்கபடுகிறார்கள். வீரமுட்டிகள் தமிழ் நாடு, ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்டிரா, தெலுங்கானா மற்றும் இலங்கையில்ம் பரவலாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள், கால மாற்றத்தினால் ஆங்காங்கே சிதைந்து வெவ்வேறு இடங்களில் வேறு இன பெயருடன் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.1 வீரபத்திரசுவாமி வண்ணார்களின் குல தெய்வமாக வணங்கப்படுகிறது இந்த சமூக மக்கள் வீரபத்திரர் வழி வந்தவர்களாக தமிழகத்தில் கருதப்படுகின்றனர்.2

**வீரேசுவரருக்கு வழங்கும் வேறுபெயர்கள்**

**வேறுபெயர்கள்**: வீரபத்திரருக்கு வீரப்பர், வீரன்னர், வீர், முட்டு வீரன்னர், உத்தான வீரபத்திரர், அக்னி விரபத்திரர், அகோரவீரபத்திரர், தட்சாரி, வீரேசுவரர், வீரசூடாமணி, வீரகர்,கிரதத்வம்சி, தட்சயஞ்ஞன், மல்லனார், இயக்கடிவீரர், வீரேசுவரன் உறங்காவல்லன், உறங்காபுளி கருப்பன் என்று பல பெயர்கள் உள்ளன.

**பழந்தமிழ் இலக்கியங்களில் வீரேசுவரர் எனும் வீரபத்திரர்**

*“ஆளுடைத் தனி ஆதியை நீத்தொரு*
*வேள்வி முற்ற விரும்பிய தக்கனோர்*
*நீள் சிரத்தை நிலத்திடை வீட்டிய*
*வாள் படைத்த மதலையைப் போற்றுவாம்”*

*(திருச்செந்தூர்ப் புராணம், பாடல் -2)*

என திருச்செந்தூர்ப் புராணத்தால் வீரபத்திரக் கடவுள் போற்றப்படுகிறார். இங்கே வீரபத்திரப் பெருமான் கையில் வாளுடன் விளங்குவதாகவும், பரம்பொருளை நிந்தனை செய்து நாஸ்தீகத் தனமாக வேள்வி செய்த தக்கனின் கொட்டத்தை அழித்த வீரராகவும் போற்றப்படுகிறார். இப்பெருமானின் வணக்க முறைமை இந்துக்களின் வீரத்தின் சாட்சியாகவும், வீரத்தின் விளை நிலமாகவும் விளங்குகிறது.

சூடாமணி நூலில் வீரபத்திரரின் பெயர்களாக

*“உக்கிரன் அழல்க்கண் வந்தோன்*
*ஊமைமகன் சிம்புள் ஆனோன்*
*முக்கண்ணன், சடையோன், யானை*
*முகவற்கு இளையோன், வில்லி*
*செக்கர் வான் நிறத்தோன், குரோதன்,*
*சிறுவிதி மகம் சிதைத்தோன்*
*மிக்கப் பத்திரைக் கேள்வன்,*
*வீரபத்திரன் பேராமே” (சூடாமணி, பாடல். 30)*

என்று பன்னிரு பெயர்கள் பேசப்பட்டிருக்கின்றன. கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் ’வீரபத்திரப்பரணி’ என்ற ’தக்கயாகப்பரணி’ பாடியிருக்கிறார். பரணி என்பது போர் குறித்த நூலாயினும் வீரபத்திரரை முன்னிறுத்தி இந்நூல் அவர் தம் பெருவீரத்தைப் புகழ்ந்து பாடுகிறது.

வீரபத்திரர் பற்றி சிறப்பாகப் பேசும் நூல்களில் “சைவசித்தாந்தக் களஞ்சியமாக” கச்சியப்ப சிவாச்சார்யார் பாடிய “கந்தபுராணம்” முதன்மையானது. கந்தபுராணத்தின் கந்தன் வரலாற்றுக்கு ஆதாரக் கதையாக வீரபத்திரர் வரலாறு பேசப்பட்டிருக்கிறது. இறைவனை மதியாது தக்கன் செய்த யாகத்திற்குச் சென்று அவிர்பாகம் பெற்றதால் தான் சூரபத்மனால் தேவர்கள் துன்புற நேர்ந்தது என்று சொல்லி கந்தன் கதைக்கு ஆதாரமான கதையாக வீரபத்திரர் வரலாறு இங்கு எழுச்சி உணர்வுடன் எடுத்துரைக்கப் பெற்றிருக்கிறது.

*“அடைந்தவி உண்டிடும் அமரர் யாவரும்*
*முடிந்திட வெருவியே முனிவர் வேதியர்*
*உடைந்திட மாமகம் ஒடியத் தக்கனை*
*தடிந்திடும் சேவகன் சரணம் போற்றுவாம்”*

*(கந்த புராணம் - கடவுள் வாழ்த்து, பாடல்.11)*

என்று கந்தபுராணம் கடவுள் வாழ்த்திலே வீரபத்திரக் கடவுளைப் போற்றுவதுடன் அமையாது, சிறப்பாக தட்ச காண்டத்தில் வீரபத்திரர் வரலாறு குறித்து விரிவாகப் பேசுகிறது. அவற்றுள்ளும் உமை வரு படலம், வேள்விப்படலம், வீரபத்திரப்படலம், யாகசங்காரப்படலம் ஆகியன சிறப்பாக வீரபத்திரர் தக்கன் வேள்வி அழித்த வரலாறு பேசப்பட்டிருக்கிறது.

*"அந்திவான் பெரு மேனியன் கறைமிடற்றணிந்த*
*எந்தை தன் வடிவாய் அவனுதல் விழியிடை*
*வந்து தோன்றியே முன்னுற நின்றனன் மாதோ*
*முந்து வீரபத்திரன் எனும் திறலுடை முதல்வன்"*
*பார்த்த திக்கினில் கொடுமுடி ஆயிரம் பரப்பிச்*
*சூர்த்த திண்புய வரையிரண்டாயிரம் துலக்கி*
*போர்த்த தாள்களில் அண்டமும் அகண்டமும் பெயர*
*வேர்த்தெழுந்தனன் வீரரில் வீரன்"*

*(ஸ்ரீ வீரபத்திரர் மானச பூஜாலங்கார மாலை, பாடல். 02)*

இப்பாடல்களில் கச்சியப்ப சிவாச்சாரியாரின் கவி ஆளுமையும் பக்தியும் வீரபத்திரப் பெருமான் பேரெழுச்சியும் சிறப்பாகப் புலப்படுகிறது. வீரபத்திரருக்கும் வாகனம் நந்தியே.. சிவ வடிவமான வீரபத்திரர் அந்தணரும் அரசரும் மட்டும் பணியும் கடவுள் அல்லர். அவர் பழங்குடி மக்களின் சிறுகுடில் தோறும் கல் வடிவிலும், திரிசூல வடிவிலும் நின்று இந்த மக்களுள் மக்களாகிக் காக்கிற கருணைக் கடவுள். இந்த வீரபத்திரப் பெருமானின் வழிபாடு பாரதம் எங்கும் அதற்கு அப்பாலும் பரவியிருக்கிறது. சிவபெருமான் ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், ஸத்யோஜாதம் என்கிற ஐந்து திருமுகங்களைக் கொண்டு ஐந்தொழிலாற்றுகிறான். இம்முகங்களில் அகோராம்சமாக ஆணவாதி மலங்களை அழிப்பதற்காக வீரபத்திரரைப் படைத்தான் என்று குறிப்பிடுவர்.

*"மரகத மணிநீலம் கிண்கிணீ ஜாலபத்தம்*
*ப்ரகடித ஸமுகேச'ம் பானு ஸோமாக்னி நேத்ரம்*
*… சூல தண்டோக்ர ஹஸ்தம்*
*விருதல மஹிபூஷம் வீரபத்ரம் நமாமி"*

என்று வீரபத்திரர் பற்றிய ஒரு தியானஸ்லோகம் சொல்கிறது. இதில், மரகத மணியில் ஒளியுடையவர், கிண்கிணி அணிந்த கழலினர், சூரியன், சந்திரன், நெருப்பு இவை மூன்றையும் முக்கண்களாய் கொண்டவர், சூலம், தண்டம் ஆகியவற்றை ஏந்தியவர் அழகியவரான (கோரம் என்பதன் எதிர்ச் சொல் அகோரம்) வீரபத்திரரை வணங்குவோம் என்று சொல்லப் பெற்றிருக்கிறது.

வீரபத்திரரை திருஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் ஆகிய தேவாரமுதலிகளும் மாணிக்கவாசகரும் பலவாறாக, தேவாரங்களில் பெயர் சுட்டாமல் போற்றிப் பாடியிருக்கிறார்கள். வீரபத்திரர் வரலாற்றுச் செய்திகளை முழுவதும் புராணக்கதைகள் என்று ஒதுக்குவது சிறப்பாகத் தெரியவில்லை. இவற்றில் பல தத்துவச் செய்திகள் இருப்பினும், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் நடந்த, நடக்கக் கூடிய செய்தியாகவே இதனைக் காண முடிகிறது.

அஷ்ட வீரட்டம்: வீரபத்திரரின் யாக சங்காரம் என்பது பல செய்திகளைப் பக்திமான்களாய சைவசமயிகளுக்கு எடுத்துரைக்கிறது. சிவவழிபாட்டாளர்கள் அந்த தேவதையை, இந்தத் தேவனை, அந்தக் கிரஹத்தை, இந்தக் கிரஹத்தை என்று ஓடி ஓடி வழிபடத்தேவையில்லை.. அவற்றை எல்லாம் தண்டித்து ஆட்கொண்டவராய வீரபத்திரன் விரைகழலை வழிபட்டால் போதுமல்லவா..? இப்பொருள் பெற திருநாவுக்கரசர் பாடுகிறார்.

*"எச்சன் நிணைத் தலை கொண்டார் பகன் கண் கொண்டார்*
*இரவிகளில் ஒருவன் பல் இறுத்திக் கொண்டார்*
*மெச்சன் வியத்திரன் தலையும் வேறாக் கொண்டார்*
*விறல் அங்கி கரங் கொண்டார் வேள்வி காத்த*
*உச்ச ந(ய)மன் தாள் அறுத்தார் சந்திரனை உதைத்தார்*
*உணர்விலாத் தக்கன் தன் வேள்வியெல்லாம்*
*அச்சமெழ அழித்துக் கொண்டு அருளும் செய்தார்*
*அடியேனை ஆட்கொண்ட அமலர் தாமே"*

*(ஆறாம் திருமுறை, திருவாரூர் பதிகப் பாடல். 20)*

எல்லையற்ற வீரத்தின் இருப்பிடமாகத் திகழும் சிவபெருமானும், உலக நலம் பொருட்டு அனேக அசுரர்களை வென்றடக்கி அருள் புரிந்துள்ளார். அவை, அவருடைய அளவற்ற ஆற்றலுக்கும், வீரத்துக்கும் அடையாளமாக உள்ளன. அவை அனைத்தையும் நம்மால் நினைவில் நிறுத்த முடியாது என்பதால் ஆன்றோர்கள் அவற்றில் எட்டை வரிசைப் படுத்தி "அஷ்ட வீரட்டம் " என்று போற்றி நாம் வணங்க வகை செய்துள்ளனர் .

அவை :

- ✓ பிரம்மனின் சிரம் கொய்தது, (கண்டியூர் எனும் தலத்தில்)
- ✓ எமனை காலால் உதைத்து அழித்தது.(திருக்கடவூர் எனும் திருத்தலத்தில்)
- ✓ முப்புரம் எரித்தது (திருவதிகை எனும் தலத்தில்)
- ✓ யானையை உரித்து அதன் தோலை போர்வையாகப் போர்த்திக் கொண்டது (வழுவூர் எனும் தலத்தில்)
- ✓ தட்சனின் யாகத்தை அழித்தது (திருப்பறியலூர் எனும் தலத்தில்)
- ✓ அந்தகனை வதைத்தது (திருக்கோவலூர் எனும் தலத்தில்)
- ✓ காமனை அழித்தது (கொருக்கை எனும் தலத்தில் )
- ✓ ஜலந்தரனை அழித்தது (திருவிற்குடி எனும் தலத்தில் )

என வரிசைப் படுத்தியுள்ளதை அறிந்துகொள்ள முடிகின்றது.

**பத்ம புராணம்**: வீரபத்திரர் சிவனின் மெய்காவலன் என்ற பொறுப்புடன், தேவர்களை அசுரர்களிடமிருந்து காக்கும் பணியையும் செய்தார். பஞ்சமேத்திரன் என்ற அசுரன் தேவர்களை தன் வாயில் இட்டு விழுங்கிய போது வீரபத்திரர் பஞ்சமேத்திரனுடன் போர் செய்தார். போர் ஓர் ஆண்டுகாலம் நீண்டது. போரின் இறுதியில் வீரபத்திரர் பஞ்சமேத்திரனைக் கொன்று தேவர்கள் அனைவரையும் உயிர் பெறச் செய்தார். தேவர்களை வீரபத்திரர் காத்தது அறிந்த சிவன் வீரபத்திரருக்கு பல வரங்கள் வழங்கினார் என பத்ம புராணம் பாதாள காண்டத்தில் குறிப்புள்ளது.

**கந்த புராணம்** : வீரபத்திரர் சிவ கணங்களுள் ஒருவர் என்ற குறிப்பு கந்த புராணத்தின் நான்காவது பகுதியில் உள்ளது. யோகினிகள், சூரியன், பிரம்மா ஆகியோரின் செயல்களைப் பற்றி அறிய சிவன் தன் கணங்களுக்கு காசி நகர் நோக்கி செல்லும்படி ஆணையிட்டார். வீரபத்திரர் உட்பட கணங்கள் காசியில் தங்கி அங்குள்ளவற்றை கவனித்தனர். காசி மன்னனாகிய திவோதாசனையும் அறிந்து கொள்ள அங்கே வாழ்ந்தனர் என கந்த புராணத்தில் வீரபத்திரர் பற்றிய கதை வருகிறது.

சாக்த மரபில் வீரபத்திரர் சிவனின் எட்டு மெய்காவலர்களுள் ஒருவர். மந்தன பைரவ தந்திரம்3 நூலில் காமகயாவின் (பைரவரின் கிழக்கு முகம்) எட்டு காவலர்களுள் வீரபத்திரர் ஒருவர் என்ற குறிப்பு உள்ளது. சிவனுக்கு சங்கபாலன், காங்கலன், விசாலகன், அஜயன், விஜயன், வீரபத்திரன், ரக்தக்ஷன், கஷ்மலன் என எட்டு மெய் காப்பாளர்கள் என நூல் குறிப்பிடுகிறது. நதபித்தையின் எட்டு யோகிகளுள் வீரபத்திரர் ஒன்று என்ற குறிப்பும் மந்தன பைரவ தந்திரத்தில் வருகிறது. எட்டு யோகிகள் - வீரபத்திரர், காளி, கபாலி, விகிர்தை, க்ரோஷ்டாங்கி, வாமபத்ரர், வாயுவேகை, ஹயானன்.

வீரபத்திரர் விமலாகமத்தை சர்வாத்மகரிடமிருந்து பெற்றதாக பிரதிசம்கித நூல்4. குறிப்பிடுகிறது. விமலாகமம் பதினெட்டு ருத்ரபீட ஆகமங்களுள் ஒன்று. சிவ ஆகமங்களில்5 உள்ள இருபத்தியெட்டு சித்தாகமங்களிலும் ஒன்றாக விமலாகமம் உள்ளது.

சமணத்தில் தாமரலிப்தியிலுள்ள ரிஷபதத்தரின் மகனாக வீரபத்திரர் வருகிறார். பொ.யு. 11-ம் நூற்றாண்டைச் சேர்ந்த ஹேமசந்திரரின் திரிசஷ்டிசலாகபுருஷ சரித்திரத்தில்6 ரிஷபதத்தரின் மகன் வீரபத்திரர் பற்றிய குறிப்பு உள்ளது.

**புராணங்களில் காணலாகும் வீரேசுவரர் பற்றிய குறிப்புகள்**

புராணங்களில் கி.பி 5 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வீரபத்திரர் தொடர்பான செய்திகள் இடம்பெற்றுள்ளன. கி.பி. 6 ஆம் நூற்றாண்டு மற்றும் கி.பி 9 ஆம் நூற்றாண்டுகளில் தோன்றிய பக்தி இலக்கியங்களில் 1, 2, 4 மற்றும் 6 ஆம் திருமுறைகளில் வீரபத்திரர் செய்திகள் இடம்பெற்றுள்ளன.

பொதுவாக, இந்துக் குழுப் படிமங்கள் அமைக்கப்படும் போது சப்தமாதர் படிமங்களுடன் வீரபத்திரர் படிமம் அமைக்கப்படுவது மரபாகும். இந்திய கலை வரலாற்றில் இப்படிமம் கி.பி 7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சாளுக்கியர் காலத்தில் வெட்டப்பட்ட எல்லோரா குகை எண்-14 மற்றும் எண்-21 இல் இடம்பெற்றுள்ளது. தமிழகத்தில் கி.பி 7ஆம் நூற்றாண்டில் மலையடிக்குறிச்சியில் இப்படிமம் அமைக்கப்பட்டது. விஜயநகர ஆட்சியாளர்கள் காலத்தில், வீரபத்திரர் அவர்களின் குல தெய்வமாக வழிபடப்பட்டதால் இப்படிமம் கி.பி. 16ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் சிறப்பான வளர்ச்சி பெற்றது. குறிப்பாகத் தமிழகத்தில் விரிஞ்சிபுரம், தேவிகாபுரம், மதுரை, தாடிக்கொம்பு, தாரமங்கலம் மற்றும் கிருஷ்ணாபுரம் ஆகிய இடங்களில் இப்படிமம் காணப்படுகிறது.

வீரபத்திரர் குறித்து நமது புராணங்களில் மேன் மேலும் பல செய்திகள் சொல்லப்பெற்றிருப்பதைக் காண முடிகிறது. யஜுர் வேதத்தின் உயிர்நாடியாக விளங்குகிற ஸ்ரீ ருத்ரத்தினை அடுத்து வரும் சமகம் தட்சனால் பாடப்பெற்றது என்றும் சிலர் நம்புகிறார்கள். அதற்கு ஆதாரமாக அவர்கள் அதில் வரும் “மே” என்ற சப்தத்தையே எடுத்துக் கொள்கிறார்கள். இது கொஞ்சம் சுவாரஸ்யமாக இருப்பினும் சிந்திக்கத்தக்கது.

அவர்கள் கூற்றின் படி, சிவபெருமானால் மறு உயிர் பெற்ற ஆட்டுத் தலை கொண்ட தக்ஷன் சிவனைத் துதித்துப் பாடியது தான் யஜுர் வேதத்தின் முக்கிய பகுதியாகிய ஸ்ரீ ருத்ரத்தினை அடுத்து வரும் சமகம் என்பது. ஒவ்வொரு பதத்திலும் ஆட்டின் சப்தமாகிய “மே” என்ற சப்தம் வரும் வகையில் அமைந்தது. ‘மே’ என்றால் வேண்டும் என்பது அர்த்தமாகும். “சஞ்சமே மயச்சமே ப்ரியஞ்சமே” என்று ஒவ்வொரு பதத்திலும் “மே” என்று அமையும். மகாபாரதத்தின் சாந்திபருவத்திலும், மத்ஸயபுராணயத்தின் 72ம் அத்தியாயத்திலும், பாகவத புராணத்திலும், லிங்கபுராணம், வராஹபுராணம், கூர்மபுராணம், போன்றவற்றிலும் வீரபத்திரரைப் பற்றிய செய்திகள் நிறைவாக இருக்கின்றன.

கர்நாடக நாட்டுப்புறவியலில் “வீரகசே” என்ற கூத்து மரபு பேணப்பட்டு வருகிறது. இதே போல இலங்கையில் யாழ்ப்பாணத்து கட்டுவன் பகுதியில் பாரம்பரியமான வீரபத்திரக் கூத்து அப்பகுதியில் வதியும் தாழ்த்தப்பட்ட சமூகத்தினரால் ஆடப்பட்டு வருகிறது. இவைகளில் வீரபத்திரர் வரலாறு கூத்து வடிவில் காண்பிக்கப்படுகிறது. ஆந்திரா எங்கும் வீரபத்திரர் வழிபாடு பரவியிருப்பதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். ஸ்ரீ சைலம் மல்லிகார்ஜுன ஸ்வாமியை ஆந்திர மக்கள் மல்லர் என்று போற்றுவதுடன் அவரை வீரபத்திரர் என்றே கருதி வழிபடுகின்றனர்.

விஜய நகர அரசரான ஹரிஹரரின் காலத்தில் கன்னடத்தில் இராகவையங்கார் என்பவர் வீரபத்திரர் வரலாறு பற்றி “வீரேச விஜய” என்ற நூலைப் படைத்திருக்கிறார். (பொ.பி 1400களில்) பத்ரகாளியை வீரபத்திரரின் தோழியாகவும், மனைவியாகவும் போற்றுவர்.

சரபேஸ்வரர் என்பதும் வீரபத்திரர் நரசிங்கப் பெருமானைச் சாந்தப்படுத்த எடுத்த மூர்த்தமே என்று கொள்வர். யோகப்பயிற்சியிலும் “வீரபத்ராசனா” என்று ஒரு வகை ஆசனம் அமைந்திருக்கிறது.

**வழிபாட்டு முறைகள்**

வீரபத்திரருக்கு தமிழகமெங்கும் கோயில் உள்ளது. அனல் போன்ற கோபம் கொண்டவர் ஸ்ரீ வீரபத்ரர், எனவே வீரபத்திரரை வழிபடுவதால் பேய்பிடித்தல், பில்லி, சூனியம் எனும் மனநோய்கள் போன்ற கண்காணாத் தொல்லைகள், மற்றும் மனதில் தோன்றும் இனம் புரியாத அச்சம் போன்றவையும் விலகுகிறது. நமக்கு தன்னம்பிக்கையும், தைரியமும், உண்டாகிடும், வாழ்வு சிறக்க வழிவகுக்கும். பவுர்ணமி, செவ்வாய் கிழமை, ஞாயிற்று கிழமை, குறிப்பாக கார்த்திகை மாத ஞாயிற்று கிழமை, சித்ரா பவுர்ணமியும் வழிபாட்டுக்கு மிகவும் உகந்தவை.

தேய்பிறை அஷ்டமி தினங்களும் பைரவவழிபாடு போன்று வீரபத்திரர் வழிபாடும் சில ஆலயங்களில் காணப்படுகிறது. பவுர்ணமி வழிபாட்டில் பால், தயிர், போன்ற வெண்மைநிற அபிஷேக பொருட்களால் அபிஷேகம் செய்து வெள்ளை நிற வஸ்திரம் (சில இடங்களில் கரையில்லா வெள்ளைவேட்டி சாற்றுவர்) வெள்ளைநிற மலர் மாலைகள் அணிவித்து, வெண்நிறம் கொண்ட தயிர்சாதம், பாலன்னம் பால்பாயஸம், வெண்கற்கண்டு, பொங்கல் போன்ற நிவேதனங்கள் செய்து வெள்ளை மலர்களால் அர்ச்சிப்பது சிறப்பு என்பர்.

அஞ்சாமல் அதிரடி போர் புரிய வெற்றிசின்னமாக போர்வீரர்கள் தும்பைபூ மாலை அணிவது பழந்தமிழர் வழக்கம். வீரபத்திரபெருமானும் தும்பைபூ மாலை அணிந்து தட்சனின் யாகத்தை அழிக்க சென்றார் என்று தாராசுரம், ஐராவதேவதேஸ்வர் ஆலயதிலுள்ள வீரபத்ரப் பரணி அல்லது தக்கயாகப் பரணி எனும் இலக்கியம் எழுதிய ஒட்டகூத்தர் உரைக்கிறார்.

எனவே வீரபத்ரருக்கு தும்பைபூ மாலை விசேஷம், தும்பைபூ அர்ச்சனையும் விசேஷம். வெள்ளைநிற வஸ்திரம் வைராக்கியத்தின் அடையாளம். போருக்கு வெண்நிற ஆடை அனிந்து சென்றார் என்பதாலும் வீரபத்திரருக்கு வெண்மைநிற வஸ்திரம் விசேஷம். அதிலும் வண்ணநிற கறைகள் இல்லாதது அதிவிசேஷம்.

வடைமாலை, சந்தனகாப்பு, வெண்ணெய்காப்பு, வெற்றிலைமாலை சாற்றுதல், வெற்றிலை படல் சாற்றுதல் முதலியனவும் உன்னதமானவை. போருக்கு செல்லும் வீரர்க்கு அவரது உறவினர்கள் மங்கலப்பொருளான வெற்றிலைப்பாக்கு கொடுத்து வாழ்த்தி வழி அனுப்புவது நமது பண்டைய வழக்கமாகும்.

வீரபத்திரர் வெற்றிக்குரியகடவுளாகப் போற்றபடுவதாலும், பெயரிலேயே வெற்றியை கொண்டிருப்பதாலும் வீரபத்திரருக்கு வெற்றிலைமாலை சாற்றப்படுகிறது. சுவாமியை சுற்றி அதற்கென உள்ள மர பிரபையில் வெற்றிலைகளை அழகுபட அலங்கரித்து கட்டுவது வெற்றிலைபடல் எனப்படும். இதுவிரிவான வழிபாடாகும்7. அதாவது 12,800 வெற்றிலைகளை சாற்றுவது ‘உத்தமம்’ என்றும் அதில்பாதியாக 6,400 சாற்றுவது ‘மத்யமம்’ எனவும் இதைப்பற்றி அறிந்தபெரியோர்கள் தெரிவிக்கின்றனர்.

இவர் தன்னை வழிபடுபவர்களுக்கு வெற்றியையும் செல்வத்தையும் கொடுக்கிறார். வீரபத்திரரை வழிபட்டால் பொறாமை குறையும். ஆணவம் அகலும். பகை தீரும். அமைதி அதிகரிக்கும். குழந்தைப் பேறு கிட்டும். மனோபலம் மிகும். பில்லி சூனியம் பேய் பிசாசு முதலிய தொந்திரவுகள் அணுகாது என்பது ஐதீகம்.

**முடிவுரை**

இவ்வாறு வீரேசுவரர் வழிபாடு என்பது இந்தியப் பெருங்கண்டம் முழுவதும் வியாபித்திருந்ததையும் வழிபாட்டு முறைகளையும் மேற்கண்ட கட்டுரை வழி அறிந்துக்கொள்ள முடிகின்றது. பழந்தமிழ் இலக்கியங்கள், அகராதிகள், புராணங்கள் என அனைத்திலும் இந்த வழிபாட்டு முறைகள் பற்றிய குறிப்புகளும், தரவுகளும் ஒருங்கே இருந்ததை இலக்கியங்கள் வழி அறிந்துகொள்ள முடிகின்றது,

மக்களை இறைவழிப்படுத்த சைவ மதத்தின் தலைவனான சிவபெருமானால் எடுக்கப்படும் அவதாரங்களின் ஒன்றான வீரேசுவரர் எனும் வீரபத்திரர் தமிழகத்தில் எங்ஙனம் கோயில் கொண்டு அருள்பாலித்தார் என்ற செய்திகளைத் தரவுகள் சைவ நெறிகள் கூறும் வீரேசுவரர் வழிபாட்டு முறைகள் எனும் தலைப்பின் வழி அறிந்துகொள்ள முடிந்தது. சிவாகம நாமங்களில் ஒன்றான விரபத்ராய நமோ எனும் நாமத்தை நாளும் துதித்திடுவோம் வீரபத்திரரின் இறைருளினை நாளும் பெற்றிடுவோம் !!!

**குறிப்புகள்**


1. பக்தவத்சல பாரதி, ed. (2002). ‘தமிழர் மானிடவியல்’ மெய்யப்பன் தமிழாய்வகம். p. 109. தமிழர் மானிடவியல் வீரபத்திரன் வழி வந்தோரே வண்ணார்
2. பிலவேந்திரன், ed. (2004). ‘சனங்களும் வரலாறும்’. வல்லினம். p. 149,169 & கந்தையாபிள்ளை, ed. (2003). ‘சிந்துவெளித்தடமிழர்’. அமிழ்தம் பதிப்பகம். p. 159,161

3. மந்தன பைரவ தந்திரம் (Manthana bhairava thantram) - தாந்திரீக மரபில் குப்ஜிகா என்ற பெண் தெய்வத்தைப் பற்றிய நூல்
4. பிரதிசம்கிதம் ஆகமங்களின் தோற்றம் மற்றும் உறவுகளைப் பற்றிய நூல்
5. சிவ ஆகமங்கள், சிவனின் ஞானத்தையும் பார்வதி பெற்று விஷ்ணுவால் ஏற்றுக் கொள்ளப்பட்டதைப் பற்றிக் கூறும் நூல்கள்.
6. சமஸ்கிருத காவியம், அறுபத்தி மூன்று முக்கிய சமணர்களைப் பற்றிய நூல்
7. முனைவர் த. தினேஷ், (2023) ‘நலம் தரும் தொரவி ஸ்ரீ சாந்த வீரபத்திரர்’’ (திருத்தல வரலாறு) இரயிட்டர்ஸ் கார்னர் பதிப்பகம். பக் : 77.